பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் 38–வது பட்டமளிப்பு விழா மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெறும் அரசு விழா ஆகியவற்றில் கலந்து கொள்ள வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேற்று முன்தினம் (2.1.2024) திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை அணிவித்து, வரவேற்றார். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சர் பெருமக்கள் உடனிருந்தனர்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38–வது பட்டமளிப்பு விழா மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெறும் அரசு விழா ஆகிய வற்றில் கலந்து கொள்ள வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேற்று முன்தினம் (2.1.2024) திருச்சிராப் பள்ளி விமான நிலையத்தில் தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை அணிவித்து, “வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்” ஆங்கில பதிப்பு புத்தகம் வழங்கி வரவேற்றார். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, அமைச்சர் பெருமக்கள் உடனிருந்தனர்.

47வது சென்னைப் புத்தகக் காட்சி

“கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் தலைமைக் கழக வெளியீடுகள்

47வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 ஜனவரி 3 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.

புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 378ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

அமைச்சர் கே.என்.நேரு இன்று திறந்து வைக்கிறார்!

செஞ்சியில் 6.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் ஆய்வு!

செஞ்சி, ஜன.4- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 6 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்புனரமைக்கப்பட்ட அதிநவீன பேருந்து நிலையத்தை முதலமைச்சரின் உத்தரவுப்படி ஜனவரி 4ஆம் தேதி இன்று மாலை திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேருக லந்து கொண்டு புதிதாக கட்டப்பட்ட அதிநவீன பேருந்து நிலையத்தை திறந்து வைக்க உள்ளார்கள்

இதையடுத்து சிறு பான்மையினர் நலன்மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்புதிய பேருந்து நிலையம் திறப்பு விழாவிற்கான முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து செஞ்சி பேருந்து நிலையத்தில் துறை சார்ந்த அதிகாரிகளுடன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள்,புற காவல் நிலை அறை, தாய்மார்கள் பாலூட்டும் அறை,பயணிகள் அமர்வதற்கு தேவையான வசதிகள் உள்ளிட்ட பணிகளையும் அவர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,செயல் அலுவலர் செந்தில்குமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக் குழு உறுப்பினர் மணிவண்ணன்,செஞ்சி நகர செயலாளர் கார்த்திக்,பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல் மணி,பேரூராட்சி உதவி பொறியாளர் சுப்ர மணியன், துப்புரவு ஆய்வாளர் பார்கவி,பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், தி.மு.க. நிர்வாகிகள்ஆ கியோர் உடன் இருந்தனர்.

ரேகா பிரியதர்ஷினி ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

திண்டிவனம் நகர மன்ற உறுப்பினர்கள் சார்பில் நல உதவிகள்!

இரா.மாசிலாமணி - சீத்தாபதி சொக்கலிங்கம் வழங்கினர்!

திண்டிவனம், ஜன. 4 - முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திண்டிவனம் 13 நகர மன்ற உறுப்பினர்கள் சேர்ந்து ஏழை, எளிய மக்கள் ஆயிரம் பேருக்கு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சியும், திண்டிவனம் நகராட்சி 25வது வார்டு உறுப்பினர் ரேகா பிரியதர்ஷினி சார்பில் மாற்றுத் திறனாளி ஒருவருக்கு ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ள மூன்று சக்கர வாகனம் வழங்கும் நிகழ்வு திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மயிலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா மாசிலாமணி, திண்டிவனம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவருமான பாங்கை சொக்கலிங்கம், திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ஆனந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.கே.பி. ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு பிரியாணி வழங்கி சிறப்பித்தனர்.

இதில், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், திண்டிவனம் நகர மன்ற உறுப்பினருமான சீனி சின்னசாமி, நந்தா நகர பொருளாளர் மற்றும் அரசு ஒப்பந்ததாரர் சின்னா ராஜேந்திரன், சாரங்கபாணி, பிர்லா, செல்வம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபு, இளங்கோவன், குணசேகர், பார்த்தீபன், சத்தீஷ், பரணிதரன், சுதாகர், சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கலை – பண்பாட்டுத் துறை வழங்கும்

சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, ஜன. 4 - கலை பண்பாட்டுத் துறை வழங்கும் “சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா” ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (2.1.2024) நடைபெற்றது.

நிதிநிலை அறிக்கையின் போது, சென்னையில் அனைத்துத் தரப்பு மக்களின் மகத்தான வரவேற்பினைப் பெற்ற சென்னை சங்கமம் கலை விழா, மேலும் எட்டு முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பு 2023- 2024 ஆம் நிதியாண்டில் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து சென்னையோடு சேர்த்து, காஞ்சிபுரம், வேலூர், தஞ்சாவூர், திருச்சி ராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் சங்கமம் நம்ம ஊரு திருவிழாவினை நடத்திட ரூ.9.90 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டது.

அரசாணையின் அடிப்படையில் முதற்கட்டமாக சென்னையில், ‘சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா’ என்ற பிரமாண்ட கலைவிழாவை 13.01.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கிறார். அதனைத் தொடர்ந்து 14.01.2024 முதல் 17.01.2024 வரை சென்னையின் 18 இடங்களில் கலை விழாக்கள் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் ஒருங்கிணைப்பு துறைகளுடன் ஆலோசனைக் கூட்டம் நேற்று 2.1.2024 சென்னை தலைமைச் செயலகத்தில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், சுற்றுலாத்துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் காகர்லா உஷா, கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் சே.ரா.காந்தி, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர காவல்துறை, போக்குவரத்து காவல்துறை, தீயணைப்புத்துறை, சுற்றுலாத்துறை, செய்தி மக்கள் தொடர்புத்துறை, போக்குவரத்துத்துறை, தமிழ்நாடு கேபிள் டிவி கார்பரேஷன், தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகம், மின்சாரத்துறை, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் போன்ற 16 அரசு துறைகளின் உயர் அலுவலர்கள் கலந்து கலந்து கொண்டனர்.

18 இடங்களில் நடைபெற இருக்கும் சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் 1500க்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலந்து கொள்கிறார்கள். இவ்விழாவினை சிறப்பான வகையில் செயல்படுத்திடதேவை யான ஒத்துழைப்பினை அனைத்து துறைகளும் வழங்கிட வேண்டும் எனவும், ஒவ்வொரு துறைக்கும் வரையறை செய்யப்பட்ட பணிகளை பணிகளை குறித்த காலத்தில் செய்து முடிக்க வேண்டும் எனவும் அமைச்சர் அறிவுறுத்தினார். சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா தொடர்பான அனைத்து பணிகளையும் சரியான முறையில் திட்டமிட்டு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறுதெரிவிக்கப்பட்டது.

பெருநகர சென்னை வாழ் பொதுமக்கள் தமிழ் நாட்டின் பாரம்பரியத்தையும், பண்பாட்டினையும் வெளியிடப்படுத்தும் நமது நாட்டுப்புறக் கலை வடிவங்களை கண்டு களிக்க ஏதுவாகவும், நாட்டுப்புறக் கலைஞர்கள் பயன்பெறும் பொருட்டும் இவ்விழா சென்னையில் 13.01.2024 முதல் 17.01.2024 வரை நடத்தப்படவுள்ளது என அமைச்சர் மு.பெ.சாமி நாதன் தெரிவித்தார்.

திருச்சி சிவா எம்.பி. – அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைக்கின்றனர்!

மேற்கு மண்டல வழக்கறிஞர் அணி பாசறைக் கூட்டம்!

சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

வழக்கறிஞர் நிர்வாகிகள் பாசறைக் கூட்டக் குறித்து கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. விடுத்த அறிவிப்பு வருமாறு:

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மேற்கு மண்டல வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பயிற்சி பாசறை கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (07.01.2024) காலை 10.00 மணியளவில் தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெறுகிறது.

கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., நிதியமைச்சர் தங்கம் தென்னரசு மேற்கூறிய பயிற்சி பாசறை கூட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்ற இருக்கின்றார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக சட்டத்துறை மாநில நிர்வாகிகளும் கீழ்க்காணும் மாவட்டங்களுக்குட்பட்ட கழக வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும்.

பங்கேற்க வேண்டிய கழக மாவட்டங்கள்:

திருப்பூர் வடக்கு - திருப்பூர் தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு - கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு - தர்மபுரி மேற்கு, சேலம் கிழக்கு - சேலம் மேற்கு - சேலம் மத்திய, கோவை வடக்கு - கோவை தெற்கு - கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு - நாமக்கல் மேற்கு, விழுப்புரம் வடக்கு - விழுப்புரம் தெற்கு, ஈரோடு வடக்கு - ஈரோடு தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு - கள்ளக்குறிச்சி தெற்கு, நீலகிரி.

குறிப்பு : மேற்கூறிய பயிற்சி பாசறை கூட்டத்தில் வழக்கறிஞரணி நிர்வாகிகள் பங்கேற்பதை மாவட்ட அமைப்பாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

என்.ஆர். இளங்கோ எம்.பி.
செயலாளர் - கழக சட்டத்துறை

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திண்டிவனம் நகரத்தில் ரேகா பிரியதர்ஷினி எம்.சி. ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் மயிலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.மாசிலாமணி, திண்டிவனம் முன்னாள் உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவருமான பாங்கை சொக்கலிங்கம், திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ஆனந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.கே.பி. ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு மாற்றுத் திறனாளி ஒருவருக்கு ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ள மூன்று சக்கர வாகனத்தை வழங்கினர்.

அமைச்சர் கே.என்.நேரு – கனிமொழி கருணாநிதி எம்.பி. துவக்கி வைக்கிறார்கள்!

திருச்சி மண்டல வழக்கறிஞர் அணி பாசறைக் கூட்டம்!

சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

வழக்கறிஞர் நிர்வாகிகள் பாசறைக் கூட்டக் குறித்து கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. விடுத்த அறிவிப்பு வருமாறு:

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க டெல்டா மண்டலம் மற்றும் புதுச்சேரி காரைக்கால் மாநில வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பயிற்சி பாசறை கூட்டம் வரும் சனிக்கிழமை (06.01.2024) மாலை 04.30 மணியளவில் தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெறுகிறது.

அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் பயிற்சி பாசறை கூட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்ற இருக்கின்றார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக சட்டத்துறை மாநில நிர்வாகிகளும் கீழ்க்காணும் மாவட்டங்களுக்குட்பட்ட கழக வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும்.

பங்கேற்க வேண்டிய கழக மாவட்டங்கள்:

திருச்சி வடக்கு - திருச்சி தெற்கு - திருச்சி மத்திய, கரூர் - அரியலூர் -பெரம்பலூர், தஞ்சை வடக்கு - தஞ்சை மத்திய - தஞ்சை தெற்கு, நாகை - திருவாரூர்- மயிலாடுதுறை, கடலூர் கிழக்கு - கடலூர் மேற்கு மாவட்டங்கள், திருவண்ணாமலை வடக்கு - திருவண்ணாமலை தெற்கு, வேலூர் - திருப்பத்தூர் - இராணிப்பேட்டை, புதுச்சேரி காரைக்கால் மாநிலங்கள்.

குறிப்பு : மேற்கூறிய பயிற்சி பாசறை கூட்டத்தில் வழக்கறிஞரணி நிர்வாகிகள் பங்கேற்பதை மாவட்ட அமைப்பாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

என்.ஆர். இளங்கோ எம்.பி.
செயலாளர் - கழக சட்டத்துறை

தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (02.01.2024) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.கே. கோபால், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ஹர் சஹாய் மீனா, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிர்வாக இயக்குநர் எஸ்.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு காவல்துறைத் தலைவர் க. ஜோஷி நிர்மல் குமார் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.